# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

1976 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆந் தேதிய

பகுதி II இற்குக் குறைநிரப்பி

(10. 01. 77 ஆந் தேதியன்று வெளியிடப்பட்டது)


# வீடமைப்பு அபிவிருத்தியாளர் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தம்)

1973 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, வீடமைப்பு அபிவிருத்தியாளர் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

*வீடமைப்பு, நிர்மாணை அமைச்சரால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது.*


**இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.**

கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## சட்டப்பயன் பற்றிய கூற்று

இச்சட்டமூலத்தின் சட்டப்பயனாவது, 1973 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, வீடமைப்பு அபிவிருத்தியாளர் (சிறப்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவை பின்வருமாறு செய்வதன் மூலம்; அதாவது—

(அ) வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுவதற்குத் தகைமைபெறுவதற்கென வீடொன்றை எந்தத் தேதிக்கு முன்னர் கட்டத் தொடங்குதல் வேண்டுமோ அந்தத் தேதியாக 1976, திசம்பர் 31 ஆந் தேதிக்குப் பதில் 1977 யூன். 30 ஆந் தேதியை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(ஆ) வருமான வரியிலிருந்து முழுவதாக விலக்களிக்கப்படுவதற்குத் தகைமை பெறுவதற்கென எந்த விலைக்கு மேலாக அவ்வீடு விற்கப்படுதல் ஆகாதோ அந்த விலையாகவும், அத்துடன், எந்த விலை விஞ்சப்படின், வருமான வரியின் ஐம்பது சதவீதத்திலிருந்து மட்டுமே விலக்களிக்கப் படுவதற்குத் தகைமை கொடுக்குமோ அந்த விலையாகவும், பத்தாயிரம் ரூபாவுக்குப் பதிலாகப் பதினையாயிரம் ரூபாவை இடுவதன்மூலமும்,

திருத்துவதாகும்.

*வீடமைப்பு அபிவிருத்தியாளர் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தம்)*

*ச. வ.—ஓ. 52/76*
*1012*

**1973 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, வீடமைப்பு அபிவிருத்தியாளர் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைக் குடியரசின் தேசிய அரசுப் பேரவையினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

*சுருக்கப் பெயர்.*

1. இச்சட்டம், 1977 ஆம் ஆண்டின்      ஆம் இலக்க, வீடமைப்பு அபிவிருத்தியாளர் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*1973 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவுக்கான திருத்தம்.*

2. 1973 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, வீடமைப்பு அபிவிருத்தியாளர் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(i) " 1976, திசெம்பர் முப்பத்தோராம் நாளுக்கு முன்னரும் " என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக " 1977, யூன் முப்பதாம் நாளுக்கு முன்னரும் " என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ii) " பத்தாயிரம் ரூபா " என்னும் சொல்லமைப்பு அப்பிரிவில் காணப்படும் இடங்களிலெல்லாம், " பதினையாயிரம் ரூபா " என்னும் சொல்லமைப்பை இடுவதன் மூலமும் ".